பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி
சென்னை

*06-08-2025* *WEDNESDAY* *7.15 PM*

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் அனைத்துப்பகுதிகளும் வளர்ச்சியை கண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
3. சட்டீஸ்கரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் நக்சலைட் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார், 9 நக்சலைட்டுகள் சரணடைந்தனர்.
4. உத்தராகண்டில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
5. இலங்கை சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் *Lakshaya Rajesh* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

<<<<<<<>>>>>>

நாட்டின் அனைத்துப்பகுதிகளும் வளர்ச்சியை கண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் மத்திய அரசுத்துறைகளின் ஒருங்கிணைந்த வளாகமான *Kartavya Bhawan*-ன் திறப்பு விழா நிகழ்ச்சியில் தற்போது உரையாற்றிவரும் அவர் இவ்வாறு கூறினார்.

இந்த வளாகம் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பாதையாகவும், செயல்படுத்த வேண்டிய கொள்கைகளுக்கான வழிகாட்டியாகவும் இருக்கும் என்று கூறினார்.

சுதந்திர தின கொண்டாட்டத்திற்கு முன்னர் நவீன இந்தியாவிற்கான கட்டுமானங்களை ஏற்படுத்துவதில் வரலாற்று சிறப்பு மிக்க வளாகமாக இந்த புதிய வளாகம் திகழ்வதாக பிரதமர் குறிப்பிட்டார்.

தேசத்தின் கனவுகளை நனவாக்கும் வளாகமாக *Kartavya Bhawan*-ன் திகழ்வதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், இதன் அடிப்படையிலேயே திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மக்களவைத் தொகுதி வாரியாக வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் ஒருபகுதியாக தமது விதிஷா தொகுதிக்கு உட்பட்ட உமரியாவில், அதிநவீன உற்பத்தி ஆலை ஒன்று திறக்கப்பட உள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆயிரத்து *200* கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ள இதில், வந்தேபாரத் போன்ற ரயில்களை உற்பத்தி செய்வதற்கான வசதிகள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், அப்பகுதியில் கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், பாபா அணுசக்தி ஆராய்ச்சி மையத்திற்கு மட்டும் கடந்த ஐந்தாண்டுகளில் 4 ஆயிரத்து 265 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக குறிப்பிட்டார்.

பிற நிறுவனங்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதி குறித்த விவரங்களையும் டாக்டர் ஜிதேந்திர சிங் புள்ளி விவரங்களோடு எடுத்துரைத்தார்.

<<<<<<<>>>>>>

தகவல் தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், நாடு முழுவதும் செயல்பட்டுவரும் மென்பொருள் பூங்காக்கள் மூலம் கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

குறிப்பாக, பெருநகரங்களை தவிர்த்த இதர பகுதிகளில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

நாடு முழுவதும் சிறிய நகரங்கள் மற்றும் ஊரகப்பகுதிகளை சேர்ந்த 2 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட மகளிருக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு சாவித்ரி தாக்கூர், தேசிய மகளிர் ஆணையம் சார்பில் இந்த பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்காக ஒருங்கிணைந்த முன்னேற்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்தும்பணி தற்போது நடைபெற்று வருவதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒரு வாக்குச்சாவடிக்கு ஆயிரத்து 200 வாக்காளர்கள் என்ற அடிப்படையில் வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் அரசு போக்குவரத்துக்கழகங்களில் பழைய பேருந்துகளுக்கு மாற்றாக புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் கூறியுள்ளார்.

இன்று அரியலூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<<<>>>>>>

உத்தராகண்டில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தமி கூறியுள்ளார்.

இயற்கை பேரிடரால் பெரிதும் பாதிக்கப்பட்ட உத்தரகாசி மாவட்டத்துக்கு உட்பட்ட *Dharalli*-ல் மீட்புப்பணிகளை பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் உரிய நேரத்தில் கிடைப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உணவுப்பொருட்களை வழங்குவதற்காக இரண்டு ஹெலிகாப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே. உத்தராகண்டில் இன்றும் அதி கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

உத்தரப்பிரதேசம், இமாச்சலப்பிரதேசம் உள்ளிட்ட ஒரு சில பகுதிகளிலும் கனமுதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகா, மகாராஷ்ட்ரா மற்றும் கேரளா மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளிலும் கனமுதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

<<<<<<<>>>>>>

சட்டீஸ்கரில் 9 நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

பிஜப்பூர் மாவட்டத்தில் காவல்துறைமுன் இவர்கள் சரணடைந்ததனர்.

24 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டிருந்த ஆறு பேரும் இதில் அடங்குவர் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சரணடைந்த நக்சலைட்டுகளுக்கு மறுவாழ்விற்கான ஊக்கத்தொகையாக 55 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

இதற்கிடையே, இம்மாநிலத்தின் *Gangular* பகுதியில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் நக்சலைட் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

<<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ரா துணை முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா-வை இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மகாராஷ்ட்ராவில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து இந்த சந்திப்பின்போது விவாதித்ததாக கூறினார்.

<<<<<<<>>>>>>

குஜராத் மாநிலத்தில் கைத்தறித்துறை கடந்த நிதியாண்டில் 290 கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தகம் புரிந்துள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

கைத்தறித்துறையின் வளர்ச்சிக்காக குஜராத் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்று அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மாநிலம் முழுவதும் 246-க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர் சங்கங்கள் செயல்பட்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

இலங்கை சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் *Lakshaya Rajesh* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 17-21, 21-18, 21-16 என்ற செட் கணக்கில், இந்தியாவின் *Ishita Negi*-ஐ வென்றார்.

------------------

ஐ சி சி-யின் கடந்த மாதத்திற்கான சிறந்த ஆட்டக்காரருக்கான விருதுக்கு இந்தியாவின் சுப்மன் கில், இங்கிலாந்தின் *Ben Stokes* மற்றும் தென்னாப்பிரிக்காவின் *Wiaan Mulder* ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

------

ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Harish Prakash* மற்றும் *Tayan Arun* மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

சென்னையை அடுத்த மகாபலிபுரத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இன்று பெற்ற கூடுதல் புள்ளிகளின் அடிப்படையில் அவர்கள் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

----------------

சென்னையில் இன்று தொடங்குவதாக இருந்த கிராண்ட்மாஸ்டர் செஸ் போட்டி நாளைக்கு ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

-------------

ஜெய்பூரில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் தன்வி கண்ணா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 11-8, 8-11, 11-7, 10-12, 11-6 என்ற செட் கணக்கில், எகிப்தின் *Menna Walid* -ஐ வென்றார்.

------------

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் நீரஜ் மற்றும் *Ishan Kataria* இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

பாங்காக்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 22 வயதுக்கு உட்பட்டோருக்கான 75 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் நீரஜ், கொரியாவின் *Kyeongho Bang* -ஐ வென்றார்.

ஆடவர் 90 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் *Ishan Kataria* – சீனாவின் *Chenchen Li*-ஐ வென்றார்.

--------

தாய்லாந்து சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Abhinav Thakur* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-----------------

டேபிள் டென்னிஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் *Manush Shah – Manav Thakkar* இணை 7-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

---------------

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பந்துவீச்சு பிரிவில் இந்தியாவின் முகமது சிராஜ் 15-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<<END>>>>>>